1990 சனவரி 19]

மதுரை, திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளுக்கு விடுதிகள்.

*** 4057. திரு. ஆ. அறிவழகன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளுக்கு விடுதி வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்விடங்களில் விடுதி வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுரை சட்டக் கல்லூரிக்கென 40 மாணவர் மற்றும் 12 மாணவியர் தங்குவதற்கேற்ப அரசு விடுதி கட்டடங்கள் கட்டப்பட்டு 1986 முதல் விடுதிகள் நடைபெற்று வருகின்றன. திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளுக்கு சொந்த விடுதி கட்டடம்இல்லை. திருச்சி சட்டக் கல்லூரி மற்றும் விடுதி கட்ட பாரதிதாசன் பல்கலைக் கழகம் நிலம் வழங்க முன்வந்துள்ளது. கோவைசட்டக் கல்லூரிக்கென சொந்த விடுதிக் கட்டடம் கட்டுவதற்குரூ. 11 இலட்சம் அரசு அனுமதித்து உள்ளது. கோவையில் பாரதியார் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான நிலத்தில், சட்டக் கல்லூரிக்கென அப்பல்கலைக் கழகம் கொடுத்துள்ள நிலத்தில், விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு தலைமைப் பொறியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(9—25 மணி)

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் சிரமத்தை எண்ணி அரசு விடுதி கட்டுவதற்கு இசைந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(விடை : இல்லை.)

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையை அடுத்து இருக்கின்ற திருநெல்வேலியில் பொறியியல் கல்லூரி, இந்திய மருத்துவக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே நீண்ட நாள் கோரிக்கையாக, சட்டக் கல்லூரி துவங்க வேண்டுமென்று பொது மக்கள் விரும்புகிறார்கள். அதைத் துவங்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[1990 சனவரி 19

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தோற்றுவிக்கப்பட்ட சட்டக் கல்லூரி களுக்கு இன்னும் போதுமான கட்டிடங்கள் உருவாக்கப்பட முடியவில்லை. அவை நிறைவேறியதைத் தொடர்ந்து அல்லது பெருமளவுக்கு நிறைவேறக்கூடிய நிலையைத் தொடர்ந்து, நிதி வசதியைப் பொறுத்துத்தான் மேலும் சட்டக் கல்லூரியை உரு வாக்குவது பற்றி எண்ண முடியும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலே சித்த மருத்துவக் கல்லூரி கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அந்தக் கல்லூரிக்கு கட்டிடம் கிடையாது. கல்லூரி மாணவர்களுக்கு விடுதியும் கிடை யாது. பல இடங்களில் தங்கி. . . .(மணி அடிக்கப் பெற்றது.)

திரு. சு. குருசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மதுரை சட்டக் கல்லூரியில் ஒதுக்கப்பட்டுள்ள அறைகள் அங்கே படிக்கின்ற மாணவர்களுக் குப் போதாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த அறைகளை அதிகப்படுத்தி கொடுக்கின்ற முயற்சி அரசிடம் உள் ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இருக்கின்ற அறையை அதிகப்படுத்துவது, விரிவுபடுத்துவது அவ்வளவு எளிதல்ல. புதிய கட்டிடங்கள் கட்டு வதற்கு பெரிய திட்டம், 92 இலட்சம் ரூபாய் அளவுக்குப் போடப் பட்டு, அந்த நிதியை வருங்காலத்தில்தான் தேட வேண்டி இருக் கிற காரணத்தால் அதற்குரிய நிதி கிடைக்கிறபோது பணி தொடங்கப்படும்.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கோவையில் சட்டக் கல்லூரி ஆரம்பித்ததிலிருந்து தொடர்ச்சியாக இதே மன்றத்திலே பல வருடங்களாக அந்தக் கல்லூரிக்குச் சொந்தமாக வகுப்பறைகள், காரியாலயங்கள் போன்றவற்றிற்கான கட்டிடங்கள் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டே வந்திருக்கிறேன். இப்பொழுதுதான் அதற்கு ஒரு முடிவு வருவது மாதிரி தெரிகிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும்படியான பதிலில், விடுதிகள் கட்டு வதற்கு ஏற்பாடு ஆகியிருக்கிறது என்பது பற்றி சொல்லப்பட் டிருக்கிறது. வாடகைக் கட்டிடத்திலே இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிற அந்தக் கல்லூரிக்கு, வகுப்பறைகளுக்கும், காரி யாலயங்களுக்கும் தேவையான சொந்தக் கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்து தருமா என்று கேட்க விரும்புகிறேன்.

[1990 சனவரி 19]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவை சட்டக் கல்லூரிக்குச் சொந்தமான கட்டிடங்கள் இல்லாமல் வாடகைக் கட்டிடத்தில் இருக்கிற காரணத்தால் கல்லூரிக் கட்டிடமும், விடுதிக் கட்டிடமும், சேர்த்துக் கட்டுவதற்கு அங்கேயுள்ள பாரதியார் பல்கலைக் கழகத்திலே யிருந்து நிலம் கேட்கப்பட்டு 20 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து இத்துறைக்கு அந்தப் பல்கலைக் கழகம் வழங்க இசைந்து இருக்கிறது. அந்த இடத்தைப் பெறுவதற்கான நடவடிக்கையும் அதைத் தொடர்ந்து கட்டிடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகளும் உருவாகும்; ஆனால் படிப்படியாகத் தான் உருவாக்க முடியும்.

திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பொதுவாக பள்ளிக்கூடங்களிலே குழந்தைகள் படிக்க முடியவில்லை. பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்க்க வேண்டிய நிலையிலே இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில்....(மணியடிக்கப் பெற்றது.)

திரு. எஸ். ஏ. தங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் முத்தையா பிள்ளை மகளிர் கல்லூரிக்குச் சுற்று சுவர்இல்லாத காரணத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பை அரசு அறியுமா? (மணியடிக்கப் பெற்றது).

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரிகளிலே நிரந்தரமான காலியிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிகின்ற ஆசிரியர்களை நிரந்தரப் படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது நிரந்தரமான ஒப்பந்த அடிப்படை இடம். ஆகவே அதை முழு நேரப் பணியாக அல்லது முழு நேர அலுவலாக மாற்றுவது தனி ஆலோசனைக்கு உரியது. அது உடனடியாக ஏற்கப்பட முடியாது.

கல்லூரிகளில் பட்டப்படிப்பில் மாணவர்கள் எண்ணிக்கை.

*6739. திரு. எம். மோசஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு கல்லூரிகளில் பட்டப் படிப்பில் வரலாறு, பொருளியல், தமிழ் போன்ற பிரிவுகளில் சேர்ந்துள்ள மாணவர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைந்திருப்பதை அரசு அறியுமா?